**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.88/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.1 |
| பெயர் | பாலு | கிராமம் | |
| தகப்பனார் பெயர் | குஞ்சான் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 29.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா சத்திரப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன காயத்திரி எனது மூத்த மகள். 30.10.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் என்னுடைய தோட்டக்கொல்லையில் இருந்தேன். என் மகள் காயத்திரி கொல்லைக்கு என்னை பார்க்க வந்தாள். எனது மகள் காயத்திரி கொல்லைக்கு எதிர்த்தாற்போல் உள்ள எங்கள் வீட்டிற்கு செல்லும் போது லாரியில் அடிபட்டு விட்டதாக என்னுடைய உறவினர் மணிமுத்து எனக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனடியாக சென்று பார்த்தேன். எனது மகள் காயத்திரி Ashok Leyland லாரியின் பின்டயரில் மாட்டி எனது மகள் இறந்து கிடந்தார். அந்த Ashok Leyland வண்டியின் பதிவு எண் TN 55 BS 8121. நான் சென்று பார்க்கும் போது லாரி டிரைவர் அங்கு இல்லை. அதன் பிறகு நான் லாரியின் டிரைவரை பார்க்கவே இல்லை. விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகரர் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. இந்த விபத்துக்கு யார் காரணம் என்று எனக்கு தெரியவில்லை. விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநரின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு

விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகள் இறப்பிற்கு நான் நஷ்டஈடு பணம் பெற்றுக்கொண்டதால் இந்த வழக்கில் Ashok Leyland லாரியை அதிவேகமாக ஓட்டி வந்து என் மகளின் இறப்பிற்கு காரணமாக இருந்த இந்த வழக்கின் எதிரி தங்கராசு பெயரை சொல்லாமல் அவரை அடையாளம் காட்டாமலும் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை காப்பாற்றுவதற்காகத்தான் அவர் செய்த குற்றசம்பவத்தை மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது வழக்கு சம்பவம் குறித்து அனைத்து விபரங்களையும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை என்று சொன்னால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

Sd/−பாலு

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/− திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**